
கல்வி நிதிக்காக...... இதழின் விலை : ரூ.2.50

# குருகுலத் தென்றல்

* அடிப்படைவாத ஆன்மீகம்
* அரசியல் ஆன்மீகம்
* அறிவியல் ஆன்மீகம்

தீபம் - 10
சுடர் - 31
09-06-2026



தீரர் சுப்பரமணிய சிவா

வல்லமை தாராயோ – இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே

ஆசிரியர் : டாக்டர்.V.K.S.சிவசக்தி பாலன் M.B.B.S.,Dc.C.H.,


R. Karthik Prabhu M.S.,
V. Ravindran B.Com
S. Velayutham & Co.,

99449 70954
99449 70951
99449 70953

VELAYUTHAM TRADING COMPANY

S. VELAYUTHAM & Co

பட்டாசு மூலப்பொருட்கள் வியாபாரம்

Business in : Fireworks Raw Materials.

e-mail : velayuthamravi75@gmail.com

3/666/38, Sattur Main Road, Sivakasi - 626 189.



सेन्थिल

Enjoy Your Memorable Moments with...

# SENTHIL'S

## Fancy Fireworks & Crackers



KALAIMAAN™ REGD. NO: 2392499

LEO BRAND

## SENTHIL FIREWORKS INDUSTRIES

411-A, Kamarajar Road, Sivakasi - 626123.
Ph : 04562 221394, 2223941
Email : senthilfw@yahoo.com

# கெட்டிக் காரர்களின் பொய்யும் புரட்டும்

சென்ற இதழில் (மே 2026) – ''பாரத கல்விக் கூடங்கள்'' என்ற கட்டுரையில் – அன்றைய ஆங்கிலேய அரசின் புள்ளி விபரப்படி அன்றைய குருகுலம் கல்வி முறையில் மிக அதிக அளவில் சூத்திரர்களே கல்வி பயின்றார்கள் என்பதை ஆதாரங்களுடன் கூறும் ''அழகிய மரம்'' என்ற நூலின் விபரங்கள் வெளியிடப்பட்டன,

இது குறித்து நமது மதிப்பிற்குரிய தமிழாகரர் திரு. தெ. முருகசாமி ஐயா அவர்கள் வழக்கம் போல் கிழ்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார்கள்

அவரது கடிதத்தின் சுருக்கம் –

**"நான்காம் வருணத்தார்க்குக் கல்வி மறுக்கப்பட்டதைப் பொய் தகவல் என்றது சரியன்று, ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது போல் தரப்பட்ட புள்ளி விபரம் ஒரளவிற்குத் தான் – எதார்த்தம் தான் மெய்"**

**'ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான் மறையைப்**
**போற்றியுரைத்து ஏட்டின் புறந்தெழுதார் – ஏட்டெழுதி**
**வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலை**
**சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று' –கோதமனார்**

என்று திருவள்ளுவ மாலை (15வது பாடல்) வேதம் படிக்க அந்தணர்க்கேத் தகுதி என்றதால், பிறர் படித்து விடக் கூடாது என்பதற்காகவே எழுதி வைக்க வில்லையாம்

–என்று தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

**இது குறித்து என்து பதில்–**

நமது பெரும் மதிப்பிற்குரிய தழிழாகரர் ஐயா அவர்கள் சூத்திரர்களுக்குக் கல்வி மறுக்கப் பட்டதாய் பலபல முறை நமது இதழில் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

இந்த கடிதத்தில்–

வேதம் படிக்க அந்தணர்க்கே தகுதி என்றதால் பிறர் படித்து விடக் கூடாது என்பதற்காகவே எழுதி வைக்கவில்லை – என்று கதை அளந்து விட்டுள்ளார்கள்

இது முன்னுக்குப் பின் முரணான கூற்று

எழுதப் படிக்கவே தெரியாமல் ஒருவனை ஆக்கிவிட்டு– அவன் எதையும் படித்து விடக்கூடாது என்பதற்காகவே எழுதி வைக்கப்பட வில்லை என்று மதிப்பிற்குரிய தமிழாகரர் ஐயா அவர்கள் கூறுவது மிகப் பெரிய நகைச்சுவையாகும்.

எழுத படிக்கத் தெரியாதவனுக்கு முன்னால் எதை எழுதி வைத்தாலும் நிச்சயம் அவனால் எதையும் படிக்க முடியாது. உண்மை அவ்வாறு இருக்க எழுபடிக்கத் தெரியாத சூத்திரனுக்காக அந்தணர்கள் வேதங்களை எழுதாமல் மறைத்து மெனக்கெட வேண்டிய அவசியம் இல்லவே இல்லை.

எனவே–

மதிப்பிற்குரிய தமிழாகரர் ஐயா அவர்களின் வாதம் அடிப்படை அற்றது அர்த்தமற்றது.

தமிழாகரர் திரு.தெ.முருகசாமி ஐயா அவர்கள் தமிழ் கல்லூரி முதல்வராகப் பணியாற்றியவர்.

ஆயினும்–

ஒரு தமிழ் பாடலின் பொருளினை அவர் திரித்துக் கூறுவது மிகுந்த வேதனை அளிக்கின்றது.

ஐயா அவர்கள் கூறியுள்ள மேற்கண்ட பாடலில் “வேதம் படிக்க அந்தணர்க்கே தகுதி என்றதால் பிறர் படித்து விடக்கூடாது என்பதற்காகவே எழுதி வைக்க வில்லையாம்” – என்ற மாறுபட்ட கருத்தினை பிராமண காழ்ப்புணர்ச்சி காரணமாய் ஐயா அவர்கள் திரித்து திணித்து கூறுவது மிகவும் வருத்தத்தை அளிக்கின்றது. இப்படிபட்ட பொய்யுரைக்கவேண்டிய அவசியம் ஐயா அவர்களுக்கு ஏன் ஏற்படுகின்றது என்பது எனக்குப் பலகாலமாய் புரியவே இல்லை.

எழுதி வைப்பது என்பது வேறு– சரியான உச்சரிப்பை உச்சரிப்பது என்பது வேறு – இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் ஐயா அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆனால்–

வெட்கத்தை விட்டுச் சொல்ல வேண்டும் என்றால் எனக்குத் தமிழின் – ல,ள,ழ மற்றும் ன, ண – ஆகியவற்றின் உச்சரிப்புக்களை வேறுபடுத்தி உச்சரிக்கத் தெரியாது – எனக்கு எந்த தழிழாசியரும் சிரத்தை எடுத்து உச்சரிக்கக் கற்பித்தது கிடையாது. மூன்று “ல,ள,ழ” க்களையும் ஒன்றுபோலவே உச்சரிக்கின்றேன் – இரண்டு ‘ன,ண’ க் களையும் ஒன்று போலவே உச்சரித்துக் கொண்டிருக்கின்றேன்.

‘அழித்தான்’ என்பதையும் ‘அளித்தான்’ என்பதையும் ஒன்றாகவே உச்சரித்துக் கொண்டிருக்கின்றேன். ஆனால் இரண்டும் முற்றிலும் மாறுபட்ட வேறுபட்ட பொருள் கொண்டவைகளாகும் ஒன்று–கொடுப்பதைக் குறிக்கும் மற்றொன்று கெடுப்பதைக் குறிக்கும்.

தமிழ் உச்சரிப்பினைப் பற்றி அறியாத நான் பலபல புத்தகங்கள் எழுதி கொண்டிருக்கின்றேன். இது தான் எனது தமிழ் பாண்டியத்துத்தின் உண்மையான நிலவரம்.

இதை ஐயா அவர்கள் முதலில் ஆழமாய் புரிந்து கொள்ள வேண்டும். இது புரிந்து கொண்டால் மேற்கண்ட பாடலின் பொருள் தாமாகவே ஐயா அவர்களுக்குப் புலப்படக்கூடும்

இன்று பல வால்போஸ்டர்கள், போர்டுகள், மற்றும் சுவர் விளைப்பரங்களில் தமில் மொழி எவ்வாறெல்லாம் கொச்சைப் படுத்தப் படுகின்றது என்பதைத் தயவு செய்து கண் திறந்து பாருங்கள்

“வல்லி” – என்றால் கொடியைப் போன்ற மென்மையான தன்மை கொண்டவள் என்று அர்த்தம்–ஆனால் இன்று அதன் பொருள் மறைந்து சிதைந்து ‘‘வள்ளி’’ என்றாகிவிட்டது. இன்று தமிழ் கற்றறிந்தவர்கள் கூட சௌந்திர வள்ளி, அமிர்த வள்ளி, இன்ப வள்ளி என்று தான் எழுதுகின்றார்கள்.

ஹிந்து வேத மந்திரங்களின் ஒலி அண்டம் முழுவதும் எதிரொலிக்கக் கூடியவைகள். இந்த வல்லமையை உண்ர்ந்தவர் களுக்கே ஐயா அவர்கள் கூறியுள்ள பாடலின் பொருள் விளங்கும்.

உச்சரிப்பு பிசிறு பிசகாமல் துல்லியமாய் ஹிந்து வேத மந்திரங்கள் ஓதப்படுமேயானால் அந்த ஒலி இந்த அண்டத்தில் எதை எதிர்பார்த்து ஓதுகின்றோமோ அதற்குரிய பலனை நிச்சயம் நமக்குத் தந்தருளும்.

இதுவே ஹிந்து வேத மந்திரங்களின் தெய்வீக சூப்சும ஆற்றல் ஆகும்.

தமிழாகரர் ஐயா அவர்கள் கூறியுள்ள பாடலின் உட்கருத்து இதையே எடுத்துரைக்கின்றது.

"ஹிந்து வேதங்களின் மந்திரங்கள் துல்லியமாய் பசிறின்றி தவறின்றி ஒலிக்கப்பட்டால் அண்டத்தில் நாம் நினைக்கும் பலனைப் பெற்றுத் தரும் ஆற்றல் கொண்டவைகள் ஏட்டில் எழுதி வைத்தால் உச்சரிப்புகள் சிதைந்தும் மருவியும் போய் அதன் ஆற்றல் அழிந்து விடும் என்பதால் அந்தணர்கள் அதைப் போற்றிப் பாதுகாத்தனர். ஆனால் திருக்குறனினை வல்லோர்களும் வல்லுநர்கள் பலரும் ஏட்டில் எழுதி சொல்லிடினும் அதன் ஆற்றல் மறைந்தும் சிதைந்தும் போகவில்லை"

– என்பதே இப்பாடலின் பொருளாகும்.

இப்பாடலின் பொருளினைத்தழிழாகரர் ஐயா அவர்கள் திரித்து தகுதி இல்லை என்பதால் அதைப் பிறர் படிக்க அந்தணர்கள் அனுமதிக்கவில்லை என்று கூறுவது மிகப் பெரியக் குற்றமாகும்.

ஐயா அவர்கள் இதைத் தெரிந்தே வேண்டுமென்றே திரித்துக் கூறினார்களா? அல்லது ஐயா அவர்களுக்குத் தெரிந்ததே அவ்வளவு தானா என்பதை யாமறியோம் பராபரமே!

இது குறித்து அடுத்த இதழில் மேலும் சொல்வேன்

–தொடரும்.

## 8. தொலைந்து போன பாரம்பரியங்கள்

டாக்டர் எஸ்ஸெஸ்பி

காதல்–

இளம் வயதில் காதல் வயப்படுவது மனித இயல்புகளில் ஒன்று மனித வாழ்க்கைப் போராட்டங்களின் நடுவே மனதிற்கு இதமாய் ஆறுதல்களையும் ஆனந்தத்தையும் அளிப்பது காதல்.

விதர்ப்ப நாட்டு மன்னன் பீஷ்மகனின் மகள் ருக்மணி. ஸ்ரீ கிருஷ்ண பகவானின் வீரத்தையும் புகழையும் கேள்வியுற்று நேரில் பார்க்காமலேயே அவர் மீது தீவிர காதல் கொண்டாள்.ஆனால் ருக்மணியின் அண்ணன் ருக்மி தனது நண்பனான சிசுபாலனுக்கு ருக்மணியை மணம் முடிக்க திட்டமிட்டான். இதனால் ருக்மமணி – தன்னை வந்து அழைத்துச் சென்று திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டி தனது காதலை உருக்கமாய் காதல் கடிதமாய் எழுதி ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு அனுப்பினாள்.

சிசு பாலனுடனானத் திருமணத்திற்கு ருக்மணியைக் கோயிலுக்கு அழைத்துச் சென்றபோது அவளை ஸ்ரீ கிருஷ்ண பகவான் தனது தேரில் ஏற்றி அழைத்துச் சென்றார். தடுத்த சிசுபாலன்–ருக்மி படைகளை வென்று துவாரகை சென்று ருக்மணியைத் திருமணம் செய்து கொண்டார்.

கன்னோசி மன்னன் ஜெயச் சந்திரன் மகள் ராணி சம்யுத்தா, டெல்லி – அஜ்மீர் பகுதிகளை ஆண்ட மாவீரன் மன்னன் பிரித்திவி ராஜ் சௌகான் பிரித்திவிராஜ் சௌகானின் வீரத்தையும்–பராக்கிரமங் –களையும் கேள்விபட்டு அவரை நேரில் பார்க்காமலேயே அவனைத் தன் காதலனாய் சம்யுக்தா மனப்பூர்வமாய் எண்ணினாள் பிரித்திவி ராஜ் சௌகானும் ராணி சம்யுக்தாவின் அழகான திருவுருவ படத்தை பார்த்தும் அவளின் வீரம் குறிந்து அறிந்தும் அவளிடம் தம் மனதைப் பறிகொடுத்தான்.

ஜெயச் சந்திரன் சம்யுக்தையின் சுயம் வரத்திற்கு ஏற்பாடு செய்தான். பிரித்திவிராஜ் சௌகானின் மீது கொண்ட பகையால் அவனைத் சுயம்வரத்திற்கு அழைக்காமல் அவனை அவமானப்டுத்தும் நோக்கத்துடன் சுயம்வர மண்டபத்தின் வாசலில் அவனின் சிலையை வாயில் காவலாளி போல் நிறுத்தி வைத்தான். சம்யுக்தையோ சுயம்வர மண்டபத்தில் உள்ள அனைத்து மன்னர்களையும் நிராகரித்து விட்டு வாசிலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரித்திவிராஜ் சௌகானின் சிலைக்கு மாலையிட்டாள்.

அப்போது அங்கு மாறுவேடத்தில் மறைந்து நின்ற ஜெயசந்திரன் சம்யுக்தையை தனது குதிரையில் ஏற்றிச் சென்று அஜ்மீரில் வைத்து மணம் முடித்தான்

ஸ்ரீ கிருஷ்ண பகவான் – ருக்மணி காதல் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. பிரித்திவிராஜ் சௌகான் – சம்யுக்தை காதல் 800 வருடங்களுக்கு முற்பட்டது.

இது போல் பாரத வரலாற்றிலும், பண்டைய புராணங்களிலும் ஏராளமான காதல் கதைகள் – உண்மைக் கதைகள் ஏராளம் உண்டு.

இந்த கதைகளையெல்லாம் கூர்ந்து நோக்கினால் இதில் பெண்கள் அனைவரும் ஆண்களின் வீரதீர பராக்கிரமங்களைக் கொண்டே அவர்களைக் காதலித்தது புலப்படும்.

இதுவே பாரத பெண்களின் பாரம்பரியம்.

ஆனால்

இன்று காதல் என்பது ரோட்டோர ரோமியோக்களின் காம களியாட்டமாய் ஆகிவிட்டது.

இளம் வயதில் காதல் வயப்படுவது மனித இயல்புகளின் ஒன்றாய் இருக்கலாம்.

ஆனால்–

இன்றைய சினிமாக்கள், சமூக வலை தளங்களின் மூலம் அந்த இயல்பு தறிகெட்டத்தமாய் தான் தோன்றித்தனமாய் கண்மூடித் தனமாய் வலிய திணிக்கப்படுகின்றது.

நமது முன்னோர்களின் வீரதீர பராக்கிரமங்கள் ஒப்புயர்வு அற்றவைகள். நமது பாரத வீரப்பெண்களின் வரலாறு மகோன்தை –மாவைகள்.

ஆனால்–

ஒரு குத்து விட்டால் எதிராளி 100 அடி தூரம் சென்று அங்கே இருக்கும் சுவரை பெயர்த்து விழச் செய்வதெல்லம் வெறும் சினிமாத் தனமான கேமிரா டெக்னிக்னிக்குகள் என்பதை இன்றைய பெண்கள் படித்த இளம் பெண்கள் உணராமல் போனது எந்தவிதமான மாயை என்பது புரியவில்லை

இதனால்–

காதல் செய்வது என்பது குடும்பத்தைப் பகைத்துக் கொள்வது சமுதாயத்தைப் பகைத்துக் கொள்வது – ஜாதியைப் பகைத்துக் கொள்வது என்பது அத்தியாவசியமானது தவிர்க்க இயலாதது என்றே இன்றைய இளம் சமுதாயம் எண்ணிக் கொண்டு ரோட்டோர ரோமியோக்களின் பின்னால் ஓடிப்போவது மிகுந்த வேதனைஅளிக்கின்றது.

இதை ஊக்குவிக்கும் வகையில் சமூக வலை தளங்களில் அதிகம் விமர்சனத்திற்கு உள்ளாவது நமது பாரம்பரிய சமூக பாதுகாப்பு அரணாய் விளங்கி வரும் நமது ஜாதி அமைப்பு முறை தான்.

இது குறித்து அடுத்த இதழில் விரிவாய் காண்போம்.

சென்ற இதழ் தொடர்ச்சி...

## மகாகவி காளிதாசன்(2)

சாகுந்தலம் எனும் அற்புதக் காவியத்தை போஜ ராஜன் அரசவையில் காளிதாசன் அரங்கேற்றினார். அவையிலிருந்த ஒவ்வொருவரும் அற்புத காவியமான சாகுந்தலத்தைப் போற்றினர். காளிதாசனின் மேதமைத் தன்மையை வியந்தனர்.

களைப்புடனும், அனைவரும் வாழ்த்தியதால் ஏற்பட்ட சற்றே கர்வத் துடனும் இரவு இல்லம் வந்து சேர்ந்தார். ஓய்வு எடுக்கும் நேரத்தில் இளம் வயதை ஒத்த ஒருவன் காளிதாசன் இல்லம் வந்தான். வந்தவன், காளிதாச னையும், சாகுந்தலத்தையும் போற்றிப் புகழ்ந்தான்.

அவன் ‘சாகுந்தலம் அற்புத காவியம் தான். ஆனால், தாங்கள் இயற்றிய குமாரசம்பவம் போன்றெல்லாம் சாகுந்தலம் அமையவில்லை, அதிலே குறை இருக்கின்றது’ என்று சொல்ல காளிதாசன் பெரும் அதிர்ச்சியும் கோபமும் கொண்டார்.

அறிவிற்சிறந்த நவரத்தினங்கள் அடங்கிய புலவர் குழுவே எந்தக் குறையும் சொல்லவில்லை. இந்தச் சிறியவன் குறை சொல்கிறானே என்று கோபம் கொண்டார்.

அவனை நோக்கி காளிதாசன் எந்த விதத்தில் குற்றம் கண்டுபிடித்தாய் எனக் கேட்க, இளைஞன் ‘சாகுந்தலம் அற்புதமான காதல் காவியம் தான். ஆனால், தங்கள் குமாரசம்பவம் காவியத்தில். இந்த ஸ்லோகம் சொன்னால் இந்த பலன் உண்டு என்பது போன்று பலஸ்துதிகள் அமைந்திருந்தன. ஆனால் சாகுந்தலத்தில் அப்படியொரு அருமையான பகுதி இல்லாமல் போய்விட்டது. சாகுந்தலத்தைப் படித்ததால் கிடைக்கக் கூடிய தெய்வ பலன் என்ன’ என்று கேட்க, மேலும் அதிர்ந்து அமைதியானார்.

வந்தவன் சொன்னதில் உண்மை இருக்கின்றது என்று அறிந்து அவன் அறிவிற்சிறந்தவன் என்று தெரிந்துகொண்டு, காளிதாசன் ‘இதற்கு மேல் நான் என்ன செய்யவேண்டும்’ என்று கேட்டார்.

அதற்கு வந்தவனோ. மயக்கும் சிரிப்புடன் ‘இதுவரை பல தெய்வங் களைப் போற்றி காவியங்கள் எழுதிவிட்டீர்கள் ஆனால், கிருஷ்ணரைப் போற்றி எதுவும் தாங்கள் இயற்றவில்லை. ஆகையால், சாகுந்தலத்திற்கு பிராயச்சித்தமாக கிருஷ்ணரைப் பற்றி ஏதேனும் எழுதுங்கள்’ என்றான்.

அதற்கு காளிதாசன், ‘சாகுந்தலத்திற்காக என் அனைத்து திறமை களையும் கொட்டிவிட்டேன், என்னால் இப்பொழுது எதையும் சிந்திக்க இயலவில்லை. கிருஷ்ணரைப் பற்றி நீ சொல்லிய காரணத்தினால், கிருஷ்ணரைப் பற்றி எழுத நீயே ஒரு அடியெடுத்துக் கொடு, அதற்கு மேல் நான் எழுதுகின்றேன் என்று கேட்டார்.

அதன்படியே, வந்தவன் ஒரு அடியெடுத்துக் கொடுத்தான், காளிதாசனை மறுபடியும் போற்றிவிட்டு கிளம்பிவிட்டான்.

காளிதாசன், இரவு முழுதும், அந்த வரியைத் தவிர மேற்கொண்டு எதுவும் எழுத முடியாமல், அதிகாலைப் பொழுதில் வந்தவனைத் தேட, அவன் தண்டி எனும் புலவர் குடிலில் இருப்பதாக அறிந்து, தண்டியின் ஆசிரமத்தி ற்குச் செல்ல, தண்டி தூங்கிக் கொண்டிருக்க, அவரின் கால்களைப் பிடித்து பணிவிடைகள் செய்து கொண்டிருந்தவன் தான் நேற்று இரவு தன்னிடம் வந்தவன் என அறிந்து மகிழ்வு கொண்டார்.

காளிதாசன் வருகையை உணர்ந்த தண்டி எழுந்து வரவேற்றார். தண்டி யிடம் முதல் நாள் இரவு நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் காளிதாசன் சொன்னார். தண்டி, தன் அருகிலிருந்த இளைஞனைச் சுட்டிக்காட்டி, 'என் சிஷ்யன் என்னை விட்டு நேற்று மாலை முதல் பிரியவில்லையே. நேற்று மாலை முதல் எனக்கல்லவா பணிவிடைகள் செய்தான்' என்றும் தன் சிஷ்யனை நோக்கி நீ காளிதாசனின் இல்லம் சென்றாயா' என்று கேட்க, இளைஞன் 'இல்லை குருவாகிய தங்களுக்கு பணிவிடை செய்வதே என் லட்சியம் நேற்று மாலை முதல் நான் வழிபடும் கிருஷ்ணர் மீது ஆணையாக, உங்களை விட்டு நான் பிரியவேயில்லை என்று கூறினான்.

தண்டி, 'என் சிஷ்யன் மிகச் சிறந்த பக்திமான். பொய் சொல்லமாட்டான். கிருஷ்ணர் மேல் அளவற்ற பக்தி கொண்டவன்' என்று உரைக்க காளிதாசன் மேலும் குழப்பம் அடைந்தார்.

அப்போழுது அருகிலிருந்த கிருஷ்ணர் கோயில் மணி எழும்ப,காளிதாச னின் முகத்தில் பிரகாசம் ஏற்பட்டது.

நேற்று இரவு தன்னிடம் வந்தது, தண்டியின் சிஷ்யன் வடிவில் கிருஷ்ணனே வந்தான் என்று அறிந்து புளகாங்கிதம் கொண்டார். எந்தளவுக்கு கிருஷ்ணன் மீது அந்த இளைஞன் பக்தி கொண்டிருப்பான், ஆகையாலேயே அவன் வடிவாகவே தன்னிடம் கிருஷ்ணன் வந்தான்,எனவே நேற்று இரவு கண்ணன் வடிவில் வந்த இளைஞன் எடுத்துக் கொடுத்த அடியை (வாக்கியத்தை) தண்டியின் சிஷ்யனிடமே கொடுத்து, நீயே இந்த அடியைத் தொடர்ந்து ஒரு அற்புத காவியம் இயற்றவேண்டும் என்று வாழ்த்திச் சென்றார்.

அந்த சிஷ்யனும் கண்களில் கண்ணீர் மல்க, கிருஷ்ணன் அடியெடுத்துக் கொடுத்ததைத் தொடர்ந்து ஒரு அற்புதக் காவியம் செய்தான்.

அதுவே, ஸ்ரீ ராதா மாதவ கல்யாணம். பஜனைகள் போன்றவற்றில் முதன்மை யாகப் பாடப்படும் 'அஷ்டபதி' அல்லது 'கீத கோவிந்தம்' என போற்றப்படுகின்றது.

அந்த இளைஞன் தான் கிருஷ்ணபக்தியில் சிறந்த ஜெயதேவர்.

ஜெயதேவரின் 'அஷ்டபதி' அல்லது 'கீத கோவிந்தம்' நாயகன், நாயகி பாவனை யில் அற்புதமாக புனையப்பட்டது. கண்ணனை அடைய நாயகியானவள் சொல்வது போல அமைந்தவை.

காளிதாசன் போஜராஜனின் அரசவையை அலங்கரிக்கும் நவரத்தினங்களில் போஜனுக்கும் காளிதாசனுக்கும் இடையே ஒரு அற்புத உறவு உண்டு.இருவரும் இணை பிரியவே மாட்டார்கள். இருவரும் மேதமை படைத்தவர்கள்.

ஆயினும், சில சமயங்களில் இருவருக்கும் கருத்து வேறுபாடுகள் வந்து விடும். அச்சமயங்களில் காளிதாசர் போஜனை விட்டுப் பிரிந்து எங்கேயேனும்

சென்றுவிடுவார். தான் காளிதாசன் என்பதை எவருக்கும் தெரிவிக்காமல் வாழ்வார்.

பிரிவுத் துயர் தாங்கமாட்டாத போஜராஜன் அவரைக் கண்டுபிடிக்க, தான் எழுதிய கேள்வியை மக்களிடம் பறைசாற்றச் சொல்லி, மக்களில் எவரேனும் பதில் சொன்னால் பரிசுகள் உண்டு என அறிவிப்பான். பதில் மிக நிச்சயமாக காளிதாசன் மட்டுமே அறிவார். இருவரின் மனோ நிலை சரிசமமாக இருந்தது. பதில் கூறியவரை (காளிதாசனை) வீரர்கள் போஜனிடம் அழைத்துச் செல்வார்கள்.காளிதாசனும் பரிசுகள் பெற்று வாழ்ந்து வந்தார்.

ஒரு சமயம் வழக்கம் போல போஜனுக்கும், காளிதாசனுக்கும் கருத்து வேறு பாடு வந்து பிரிகின்றனர்.

காளிதாசன் போஜனின் நாட்டிலுள்ள கிராமத்தில் தாசி ஒருத்தியின் வீட்டில், தான் ஒரு சாதாரண புலவர் என சொல்லிக் கொண்டு வசித்துவருகின்றார்.

போஜராஜன் வழக்கம்போல. ஒரு கேள்வியை. மக்களிடம் பறை சாற்றச் சொன்னான்.

அச்சமயம், தாசியும் இந்த செய்தியைக் கேட்டு, காளிதாசனிடம் வந்து, 'நீங்கள் ஏதோ புலவர் என்றீர்களே, இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்' என்றாள்.

காளிதாசனும் உடனடியாக. பதிலை ஸ்லோக வடிவில் சொல்கின்றார். தாசி நன்றாகக் கேட்டுக்கொள்கிறாள்.

தாசி தான் அரசனிடம் சொல்வதற்குள், இந்தப் புலவன் (காளிதாசன்) சென்று மன்னனிடம் வெகுமதி வாங்கிவிடக் கூடாது என எண்ணி, ஒரு கொடும் பாதகச் செயல் புரிகின்றாள்.

எவருக்கும் தெரியாமல். நயவஞ்சகமாக. காளிதாசன் கழுத்தை வெட்டிவிடுகின்றாள், காளிதாசனின் உயிர் பிரிகின்றது.

தாசியும் அரசவை வந்து போஜனிடம் காளிதாசன் சொன்ன இரு வரி களைச் சொல்கின்றாள். மன்னன் அதிர்ந்தே போகின்றான், போஜன் தாசியிடம் வேறு எதுவும் கேட்காமல் 'இந்த பதிலைச் சொன்னவனை உயிருடன் வைத்திருக்கின்றாயா அல்லது கொன்றுவிட்டாயா?' என்று கேட்கிறான். தாசி உண்மையை உரைக்கின்றாள்.

(அந்த கேள்வியும். பதிலும் : போஜன் கேட்டது 'குஸுமே குஸுமோத் பத்தி. ச்ரூயதே நச த்ருச்யதே' (பூவின் மேல் பூ மலரும் என்பார்கள். ஆனால் பார்த்ததில்லையே? – பூவின் மேல் பூ மலர்ந்ததை யாரேனும் பார்த்திருக்கின்றீர்களா?)

காளிதாசன் இதற்கு மறுமொழியாக அந்த தாசியின் முகம் பார்த்து, 'பாலே தவ முகாம்போஜத்ருஷ்டம் இந்தீவரத்வயம்' (பெண்ணே! உன் முகம் எனும் தாமரைப் பூவின் மேல் இரண்டு நீலோத்பலம் (இரண்டு நீல விழிகள்) பூத்திருக்கின்றதே – பூவின் மேல் பூப்பூத்திருபதைப் பார்க்கின்றேனே உன் முகத்தின் வடிவத்தில்)

போஜன், நெஞ்சமெல்லாம் கனக்க விரைந்து காளிதாசன் இருக்கும் இடம் வருகின்றான். போஜனிடம் ஒரு வரம் உண்டு. ஒரே ஒரு முறை இறந்தவர் ஒருவரை ஒரு முகூர்த்த நேரம் பிழைக்க வைக்க முடியும். அந்த வரத்தை காளிதாசனிடம் செயல்படுத்துகின்றான்.

காளிதாசனும் பிழைத்து, கவி நெஞ்சத்தோடு, 'நமக்கோ நேரம் மிகக் குறைவாக இருக்கின்றது, நான் எழுதிய 'ரகுவம்சம்' முடிக்கப்படாமல் இருக்கின்றது. அதற்கான குறிப்புகளைத் தருகின்றேன், அறிவில் வல்ல போஜ ராஜனாகிய நீ, ரகுவம்சத்தை முடிப்பாயாக' என்று கூறி, குறிப்பு கள் தந்து மடிகின்றார்.

கண்களில் நீர் வழிய, செயல்மறந்து, தம் உயிர்நண்பனை பிரிந்த துக்கத்தோடு திரும்புகின்றான்.

போஜராஜன், ரகுவம்சத்தின் பின் பகுதியை எழுதி முடிக்கின்றான். அதுவே போஜசம்பு என்றாகின்றது. (ரகுவம்சம்– ராமர் கதையோடு மட்டுமல்லாமல், ராமரின் முன்னோனாகிய ரகு என்பவரின் சரிதமும் கொண்டு. ராமருக்கு பின் வரும். ரகு வம்சத்தின் கடைசி (26வது) அரசனாகிய. அக்னிவர்ணன் என்பவனின் கதையோடு முடிகின்றது.)

**மருத்துவத் தென்றல்**

## குழந்தைகளின் சுவாசம் - கவனிக்க வேண்டியவைகள்

இயல்பாக குழந்தைகள் மூக்கின் மூலம் சுவாசிக்க வேண்டும். ஆனால் இன்றைய காலத்தில்பல குழந்தைகள் வாயைத் திறந்து வைத்து வாய் மூலம் சுவாசித்து, தூங்கும் பழக்கத்திற்குஆளாகி வருகின்றனர். இது சாதாரண பழக்கம் போல தோன்றினாலும், நீண்ட காலத்தில் குழந்தையின் முகம், தாடை மற்றும் உடல் வளர்ச்சியில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்த பழக்கம் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள் அடிக்கடி மூக்கடைப்பு, அலர்ஜி, அடினாய்டு அல்லது டான்சில் போன்றவை ஆகும். மூக்கின் மூலம் சுவாசிக்கும் போது காற்று வடிகட்டப்பட்டு ஈரப்பதம் சேர்க்கப்பட்டு உடலுக்கு செல்லும். ஆனால் வாய்மூலம் சுவாசிக்கும் போது இந்த பாதுகாப்பு குறைந்து ரெகுலர் பழக்கமாக மாறிவிடுகிறது.

இந்த பழக்கம் நீண்ட காலம் தொடர்ந்தால், பற்களில் பல எதிர் வினை மாற்றங்கள் ஏற்படும். முக்கியமாக, மேல் பற்கள் முன்பக்க மாக தள்ளி வளருதல், பற்கள் ஒழுங்கில்லாமல் வளருதல். பற்களால் கடிக்கும் போது மேல்தாடையும் கீழ்தாடையும் சேராதிருத்தல் (ஒப்பன் பைட்) போன்ற கோளாறுகள், ஈறுகள் உலர்வது, பல் சொத்தை அதிகரிப்பு போன்ற பிரச்னைகள் உருவாகின்றன.

இதனால் குழந்தையின் வாய்ப்பகுதி ஆரோக்கியம் பாதிக்கப்படு கிறது. முக அமைப்பில் நீளமான முகத்தோற்றம், உதடு எப்போதும் திறந்த நிலை, கீழ்தாடை பின்தங்கிய கரைகள் தோற்றம் மற்றும் முக தசைகள் பலவீனமாகுதல் ஆகிய மாற்றங்கள் இந்த பழக்கத்தின் பக்க விளைவுகள் ஆகும். இதனுடன் இரவில் சத்தமாக தூங்குதல், தூக்கக் குறைவு, கவனம் சிதறுதல் போன்ற தினசரி பிரச்சனைகளும் குழந்தை –களும் காணப்படுகின்றன.

இந்த அறிகுறிகள் இருந்தால் பெற்றோர் கவன இருக்க வேண்டும். முதலில் காது, மூக்கு பரிசோதனை மூலம் அடினாய்டு, டான்சில் அல்லது மூக்கடைப்பு போன்ற பிரச்னைகளை சரி செய்து கொள்ள வேண்டும்.

பின்னர் குழந்தைகள் நல பல் மருத்துவரை சந்திக்க வேண்டும். அவர்கள் இந்த பழக்கத்தை சரிசெய்ய பல்வேறு வழிகளைப் பயன் படுத்துகின்றனர்.

பழக்கங்களை மாற்ற உதவும் கருவிகள் மூலமும் தசை செயல்பாடு சிகிச்சை மூலமும் குழந் தையை மூக்கின் மூலம் சுவாசிக்க பழக்கப் படுத்துகின்றனர். இவை அனைத்தும் குழந்தையின் வயது, பிரச்னை யின் தீவிரத்தைப் பொறுத்து சிகிச்சை செய்யப்படுகின்றன.

ஆரம்பத்திலேயே இந்த பழக்கத்தைக் கண்டறிந்து சரியான சிகிச்சை எடுத்தால், எதிர்காலத்தில் பெரிய சிகிச்சைகளைத் தவிர்க்க முடியும். "குழந்தை மூக்கால் மூச்சு விடுவது தான் இயல்பு, வாயால் அல்ல என்பதை பெற்றோர் நினைவில் கொண்டு, குழந்தையின் முறையை கவனித்தால், ஆரோக்கியமான பற்கள். தாடை மற்றும் அழகான முக வளர்ச்சியை பெறலாம்.

## தகவல் தென்றல்

★ உயிருள்ள மூளை திசுக்களை உறைய வைத்து, பின்னர் வெற்றி கரமாக உயிர்ப்பிக்கும் புதிய உறைநிலை பாதுகாப்பு **(Cryopreser vation)** நுட்பத்தை உருவாக்கி உள்ளனர், விஞ்ஞானிகள் ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட இந்த 'மூளை ஆர்கனாய்டுகள்' எனப்படும் மனித மூளையின் சிறிய மாதிரிகளை. 'மெடி' **(MEDY)** என்ற உயிரி வேதி கலவையை பயன்படுத்தி, 18 மாதங்கள் வரை அவர்கள் பாது காத்தனர். பின்னர் அதை மீண்டும் உறை நிலையிலிருந்து போது, மூளை திசுக்களின் உயிரணு அமைப்பும், நரம்பியல் செயல்பாடு களும் அதிகம் பாதிக்கப்படாமல் இருந்தன.

பாரம்பரிய உறைவித்தல் முறைகளில் பனி படிகங்கள் உருவாகி விடும். மேலும், வேதிவினை களும் ஏற்படும். இதனால், மூளை திசுவில் உள்ள நுட்பமான நரம்பு இணைப்புகள் முற்றிலும் அழிந்து விடும். ஆனால், இந்த புதிய அணுகுமுறை, நியூரான் எனப்படும் நரம்பணுக்களையும், அவற்றுக்கு ஆதரவான செல்களையும் திறம் பட பாதுகாக்கிறது.

இதன் வாயிலாக, உறை நிலை நீக்கப்பட்ட திசுக்கள் மீண்டும் தங்களின் இயல் வளர்ச்சியையும், நரம்பு சமிக்ஞைகளையும் தொடர முடிகிறது. மனித மூளை வளர்ச்சியின் பல் வேறு கட்டங்களை பிரதிபலிக்கும் மாதிரிகளில் இச்சோதனை வெற்றிகரமாக நிரூபிக்கப் பட்டுள்ளது.

'செல் ரிப்போர்ட்ஸ் மெத்தட்ஸ்' இதழில் வெளியிடப்பட்டுள்ள இக் கண்டுபிடிப்பு, நரம்பியல் ஆராய்ச்சி மற்றும் புதிய மருந்து சோதனைகளுக்காக, மூளைத்திசுக்களை நீண்ட காலம் சேமித்து வைக்கும் முறையை மேம்படுத்தும்.

ஒட்டு மொத்த மனித மூளையையும் உறைய வைத்து மீட்டெடுப்பது என்பது இப்போதும் அறிவியல் சவாலாகவே உள்ளது.

இருந்தாலும், சிக்கலான உயிருள்ள திசுக்களை பாதுகாப்பாக வைப் பதில், இந்த ஆய்வு ஒரு மிக முக்கியமான அடுத்த கட்டமாகும். எதிர் காலத்தில் நரம்பியல் சார்ந்த நோய்களுக்கான மருந்து கண்டு பிடிப்பு களை இத்தொழில் நுட்பம் வேகப்படுத்தும் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

மூளையின் செயல்பாடுகளை, அதன் அசல் தன்மையோடு நீண்ட காலம் ஆய்வகத்தில் சேமிக்க முடிவது, மருத்துவ உலகிற்கு புதிய கதவுகளை திறந்துவிட்டுள்ளது.

★ உடலில் உள்ள திசுக்களில் ஏற்படும் காயங்களை குணப்படுத்த ஊசி வழியே செலுத்தக் கூடிய 'ஹைட்ரோ–ஜெல்' ஒன்றை சென்னை ஐ.ஐ.டி., ஆய்வாளர்கள் உருவாக்கி உள்ளனர்.

'பைப்ரோசிஸ்' எனும் திசுக்களில் ஏற்படும் காயங்களுக்கான சிகிச்சை முறை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதன் பயனாக திசுக்களில் ஏற்படும் காயங்களை குணப்படுத்த, ஊசி வழியே செலுத்தக்கூடிய ஹைட்ரோ–ஜெல்லை, சென்னை ஐ.ஐ.டி., ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

நுரையீரல், கல்லீரல் மற்றும் சிறுநீரகம் பகுதிகளில் ஏற்படும் 'பைப் ரோசிஸ்' நோய்கள் உலகளவில் ஏற்படும் மரணங்களில் 45 சதவீதத்துக்கு காரணமாக உள்ளது. தற்போது பைப்ரோசிஸ் திசு காய நோய்களுக்கு நீண்ட காலம் மருந்துகள் உட்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இதனால் கடும் பக்க விளைவுகள் ஏற்படுகின்றன.

இதற்கு தீர்வு காணும் முயற்சியில் சென்னை ஐ.ஐ.டி., ஈடுபட்டது. அதன்படி ஊசி வழியே செலுத்தும் ஜெல் உரு வாக்கப்பட்டுள்ளது. பட்டுப்பூச்சி கூடுகள், கடற்பாசிகளில் இருந்து பெறப்பட்ட இயற்கை யான உயிரி பொருட்களின் கலவையில் இது உருவாக் கப்பட்டுள்ளது. இதில் ஒரு மருந்தை ஏற்றி திசுவில் ஏற்படும் காயங்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும்.

இது ஆய்வக வெப்பநிலையில் திரவத்தன்மையுடன் இருக்கும். அதுவே உடலில் செலுத்தும்போது ஒரு கனிமமாக மாறிவிடும். காயம் ஏற்பட்ட பகுதிகளில் மட்டும் இதை பயன்படுத்தி சிகிச்சை அளிக்க முடியும். முதல் கட்ட ஆராய்ச்சியில் நல்ல முன்னேற்றம் கிடைத்துள்ளது. விரைவில் இந்த ஆராய்ச்சியை முழுமை யாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அமெரிக்காவின் புளோரிடா மற்றும் கலிபோர்னியா மாகாணங்களில் கிட்டதட்ட 3.2 கோடிகளை வெளியிட, கூகுள் நிதி உதவி பெற்ற ஆய்வாளர்கள், அமெரிக்க அரசிடம் அனுமதி கோரியுள்ளனர். டெங்கு அமெரிக்காவின் புளோரிடா மற்றும் கலிபோர்னியா சிக்குன்குனியா உள்ளிட்ட நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் அமெரிக்காவின் மிகப் பெரிய கொசு ஒழிப்பு சோதனையாக இது அமையப் போகிறது.

இதில் மனிதர்களுக்கோ விலங்குகளுக்கோ எவ்வித திங்கும் விளைவிக்காத 'வோல்பாக்கியா' (Wolbachia) என்ற இயற்கையான பாக்டீரியா செலுத்தப்பட்ட ஆண் கொசுக்கள் மட்டுமே பயன்படுத்தப் படும்.

பட்டாம்பூச்சி, அந்துப்பூச்சி, வண்டு உள்ளிட்ட பூச்சிகளில் இந்த பாக்டீரியா இயற்கையாகவே காணப்படுகிறது. மனிதர்களைக் கடிக்காத இந்த ஆண் கொசுக்களின் ஒரே நோக்கம் இனப்பெருக்கத்தைத் தடுப்பது மட்டுமே.

இவை, காடுகளில் உள்ள சாதாரண பெண் கொசுக் களுடன் இணையும் போது உருவாகும் முட்டைகள் பொரியாது. இதன் வாயிலாக காலப் போக்கில் கொசுக் களின் எண்ணிக்கை பெருமளவு சுருங்கிவிடும்.

கூகுளின் ‘டீபக் புராஜெக்ட்’ நிறுவனத்தின் ஆறு கட்டத் தொழில்நுட்ப சோதனை ஏற்கனவே பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. கலிபோர்னியா சோதனையின் போது 80 சதவித கொசுக்கள் ஒழிக்கப்பட்டன. சிங்கப்பூரில் இந்த முறையைப் பயன்படுத்திய ஓராண்டிற்குள் டெங்கு பாதிப்பு 70 சதவீதம் அளவுக்கு கணிசமாகக் குறைந்தது.

கொசு விரட்டிகளின் வாசனையை உணர்ந்து அதற்கேற்ப கொசுக்கள் தங்களை மாற்றிக்கொள்வதாக புதிய ஆய்வுகள் சொல்கின்றன. மேலும், தொடர்ந்து பயன் படுத்தப்படும் ரசாயணப் பூச்சிக் கொல்லிகளுக்கு, கொசுக்கள் எதிர்ப்பு சக்தியை வளர்த்துக்கொண்டுள்ள நிலையில், சுற்றுச் சூழலுக்கு உகந்த இந்த உயிரியல் மாற்று முறை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

★ சூரிய ஒளியில் வைக்கப்பட்ட கேன் குடிநீரை அருந்துவதனால், உடலில் ஹார்மோன் மாற்றம் ஏற்படும்.

கோடை வெயில் காரணமாக, கேன் குடிநீர் விற்பனை அதிகரித்து உள்ளது.

பலகடைகளில் குடிநீர் கேன்கள் வெளியே, சூரியஒளி நேரடியாக விழும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. அதேபோல். சுட்டெரிக்கும் வெயிலின் போது, வாகனங்களில் திறந்தவெளியில், குடிநீர் கேன்கள் எடுத்து செல்லப் படுகின்றன.

இவ்வறான சூழலில், குடிநீர் கேன்களில், வேதியியல் மாற்றம் ஏற்பட்டு, பிளாஸ்டிக் நுண்துகள்கள் குடிநீரில் கலந்து, உடலுக்கு பல்வேறு வகை யான பாதிப்பை ஏற்படுத்தும்.

குடிநீரை பொருத்தவரை, ஒரு லிட்டர் நீரில், கால்சியம் அளவு 10 முதல் 75மி.கி., இருக்க வேண்டும். அதே போல், மெக்னீசியம் அளவு 5 முதல் 30மி.கி., என்ற அளவில் இருப்பது கட்டாயம்.

குடிநீர் கேன்களில் சூரியஒளி விழும்போது, வேதியியல் மாற்றம் ஏற்படும். குறிப்பாக, கேன்களில் உள்ள, ‘பாலி கார்பனேட்’ மற்றும் பிற ரசாயனங்கள் உருகி, தண்ணீரில் கலக்கும்.

பிளாஸ்டிக் ரசாயனங்கள் உடலில் அகச்சுரப்பி அமைப்பை பாதித்து, ஹார்மோன் மாற்றத்தை உருவாக்கும். மேலும், புற்றுநோய் பாதிப்பை ஏற்படுத்தவும் வழிவகுக்கும்.

வெயிலால், குடிநீரில் உள்ள டி.டி.எஸ்., என்ற நீரில் கலந்துள்ள தனிமம் அளவு குறைந்தால், எலும்பு தேய்மான பிரச்சனையை ஏற்படுத்தும்.ஒரு குடிநீர் கேனை 30 முதல் 50 முறை மட்டுமே பயன்படுத்தலாம். கேன்களின் நிறம் மாறினால், பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். குடிநீர் கேனை வெயிலில் வைக்காமல், குளிர்ந்த அல்லது நிழலான பகுதிகளில் மட்டுமே வைக்க வேண்டும்.

★ கடல் முகத்துவாரங்களில் அமைந்துள்ள மாங்குரோவ் சதுப்பு நில காடுகள், கடல் அலைகளில் இருந்து கடற்கரையை பாதுகாக்கிறது. சுனாமி அலைகளின் தீவிரத்தையும் தடுக்கிறது. மேலும் கார்பனை மண்ணுக்குள் உறிஞ்சி சேர்ப் பதால். பருவநிலை மாற்றத்தின் தீவிரத்தை குறைக்கிறது. பூமியில் ஒரு சதவீதமே உள்ள கார்பன் மாங்குரோவ் காடுகள். மொத்த வெளியீட்டில் 15 சதவீதத்தை குறைக்கிறது.

இந்நிலையில் அதிகரிக்கும் வெள்ளம், கடல் நீர்மட்டம் உயர்வு ஆகிய வற்றால் மாங்குரோவ் காடுகளும் அழியும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் பூமியில் கார்பன் அளவு அதிகரிக்கும் ஆபத்து உருவாகியுள்ளது. அடுத்த ஆண்டுகளில் மாங்குரோவ் காடுகளின் கார்பன் உறிஞ்சும் சக்தி. வெகுவாக சரியும். இதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விஞ்ஞானிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## முகப்புத் தென்றல்

## மறக்கடிக்கப்பட்ட சுதந்திர போராட்ட தீரர் சுப்பிரமணிய சிவா

வெந்தே போகினும் நொந்தே சாகினும் வந்தே மாதரம் என்போம் என கர்ஜித்த வீரத்தியாகி.

சிவம் பேசினால் சவம் எழும் என்ற மகாகவியின் வரிகளுக்கு சொந்தமான வீரத்துறவி.சுப்பிரமணிய சிவா

நாட்டுமக்களின் மனதில் தேசபக்தியை விதைத்து விடுதலை வேட்கையை தூண்டியவர் எண்ணிலடங்காமுறை சிறை சென்று தொழு நோயால் வெறும் 41வயதில் இன்னுயிர் நீத்தார்.

பாரதமாதா கோவில் கட்டுவதை தனது வாழ்க்கையின் இலட்சிய மாக கொண்ட சுப்பிரமணிய சிவாவை அவரது தியாகத்தைத்தைப் போற்றி வணங்குவோம்.

சிவமும் பிள்ளையும், இல்லாவிட்டால் இந்தப் பாரதி வெறும் குருடன்' என்று பாரதி புகழ்ந்த இருகண்கள் வ.உ.சி. என்ற கப்பலோட்டிய தமிழனும், சுப்பிரமணிய சிவாவும்

எனது ஜாதி பாரத ஜாதி, எனது மதம் பாரதிய மதம், என் வழிபடு தெய்வம் பாரத மாதா' என்று பாரத மாதாவுக்கு ஆசிரமம் அமைத்து, ஊர் ஊராகப் பிரசாரம் செய்து நாட்டுப்பற்றை ஊட்டி வளர்த்து 47-ல் நாம் விடுதலை பெற 41 வயதிலேயே வீரமரணம் எய்திய சிவா என்ற சுப்பிரமணிய சிவாவை மறக்க முடியுமா?

ஒருபுறம் வறுமை, மறுபுறம் தொழு நோய் என்ற இருபுறத் தாக்குதலுக்கு அஞ்சாமல், தேச பக்திக்கனலை மூட்டி அந்த தியாக வேள்வி யில் கற்பூரமாகக் கரைந்த சுப்பிரமணிய சிவா, பிரிட்டிஷ் அரசுக்கு அடி மடியில் கட்டிய நெருப்பாகவே இருந்தார். சிவாவுக்குத் தங்க இடம் தந்து, உணவு தந்து உபசரித்த பெருங் குற்றத்திற்காக வ.உ.சிக்கு மேலும் ஒரு ஆயுள் தண்டனை விதிப்போம் என்று பின்ஹே என்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

4.10.1884 வத்தலகுண்டு திண்டுக்கல் மாவட்டத்தில் பிராமண குடும்பமான நாகமய்யர் நாகலட்சுமி அம்மாளின் மகனாக சுப்பிரமணியன் அவதரித்தார். 12 வயது வரை மதுரையில் வாசம். பின் ஊட்டுப்புறை (ஏழை அந்தணப் பிள்ளைகளுக்கு உணவு தந்து படிக்க உதவும் கேரளத்துச் சத்திரம்)யில் திருவனந்தபுரத்தில் தங்கினார் கோவை புனித மைக்கேல் கல்லூரியில் ஒரு வருடம் படிப்பு 1899-ல் மீனாட்சியை மணந்தார்.

லால், பால், பால் (லாலா லஜபத்ராய், பாலகங்காதர திலகர், விபின் சந்திபால்) என்ற முத்தலைச் சூலம் ஆங்கிலேயரை எதிர்த்து நின்றது. திருவனந்தபுரத்தில் இளைஞர்களைத் திரட்டிய சுப்பிரமணியம். 'தர்ம பரிபாலன சங்கம்' என்ற அமைப்பைத் தொடங்கினார் திருவாஞ்கூர் சமஸ்தானம் அவரை அங்கிருந்து விரட்டிற்று 1908-ல் தூத்துக்குடி வந்தார்

வ.உ.சி என்ற வேளாளன் (உபகாரி என்ற பொருள்) நாட்டு விடுதலை, தொழிலாளர் நலன் என்ற இரண்டையும் இருகண்களாகக் கொண்ட சுப்பிர மணியத்திற்கு அடைக்கலம் தந்தார்.

இந்தியர்களைக் கூலி என்பர் ஆங்கிலேயர் அதிலும் தூத்துக்குடி கோரல் மில்லில் வேலை பார்த்த நமது சகோதரர்கள் கூலிக்காரர்களோடு கூட இல்லை. வாழ்நாள் அடிமைகள் என்று ஆங்கில அரசும் அதிகாரிகளும் நினைத்தனர். காலை 6 முதல் மாலை 6 மணி வரை வேலை. விடுமுறை கிடையாது. உணவு இடைவேளை இல்லை. ஊதியமோ மிகமிகக்குறைவு சிறு தவறுக்கும் பிரம்படி பலமாக உண்டு.

வந்தனர் சிவமும் பிள்ளையும் போலீஸ் அதிகாரி பத்மநாப ஐயங்காரும் தன்வேலையைத்துறந்து இவர்களுடன் கை கோர்த்தார் துவங்கியது வேலை நிறுத்தம் சிவா 1908, பிப்ரவரி 23-ல் பேசிய உரை ரகசிய போலீஸ் மூலம் ஆங்கில அரசுக்குப் போனது.

ஆண்டுதோறும் இவ்வளவு தொகை இந்தியாவிலிருந்து போகிறது நீங்கள் வேலை நிறுத்தம் செய்தால் ஐரோப்பிய முதலாளிகளின் நிதி நிலை மோசமாகும் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார் சிவா.

இயந்திரங்களுக்கு ஊறு செய்வது சரியில்லை அறப்போராட்டம் வேலை நிறுத்தமே! என்று சுப்ரமண்யசிவா சொன்னது மூவாயிரம் வேலை யாட்களின் மனதில் பதிந்தது என்றெல்லாம் ரகசியபோலீஸ் அறிக்கை அனுப்பியது.

1908 பிப்ரவரி 27-ல் வேலைநிறுத்தம் தொடங்கியது. முதன் முதலாக நடந்த வேலைநிறுத்தம் இது எனலாம் தூத்துக்குடி சப்கலெக்டர் ஆஷ்துரை எத்தனையோ வழிகளில் தடுத்தும் வந்தேமாதரம் கோஷத்துடன் போராட்டம் வலுவடைந்தது. மக்களின் ஆதரவு நிதியுடன் போராட்டம் வெற்றியடைந்தது (9 நாளிலேயே அதுவும் தொழிற்சங்க இயக்கம் வலுவடையாத காலத்திலேயே சிவா, வ.உ.சி பத்மநாப ஐயங்கார் மூவருடைய உழைப்பும் எத்தகையதாக இருந்திருக்கும்!)

9.3.1908 விபின் சந்திரபால் விடுதலை பெற்றதைக் கொண்டாட பாரதி, வ.உ.சி, சிவா, பத்மநாபன் ஆகியோர் கூட்டங்கள் நடத்தினர் வீரவுரைகள் ஆற்றியசிவா. வ.உ.சி, மார்ச் 12-ல் கைதாயினர் தலைவர்களை விடுதலை செய் என்று மக்கள் முதன் முதலாக அரசியல் வேலைநிறுத்தம் செய்தனர். 7.7.1908-ல் நீதிபதி பின்ஹே, வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனையும் சுப்பிரமணிய சிவாவுக்கு 10 வருடக் கடுங்காவல் தண்டனையும் அளித்தார்.

1915 மே 15-ல் சுப்பிரமணிய சிவாவின் மனைவி மீனாட்சி காசநோயால் இறந்தார். முழு சன்யாசியானார் சிவா. 1921-ல் செட்டிநாட்டுக் காரைக்குடியில் பாரதமாதா ஆசிரமம் நிறுவினார்.

1921 நவம்பர் 17-ல் கைதானார். இரண்டரை ஆண்டுகளுக்குப் பின் விடுதலை பெற்று, பாரதமாதா ஆசிரமத்தை உயிர்ப்பித்தார் திரு.வி.க தனது நவசக்தியில் அறிக்கை வெளியிட்டு தாய் நாட்டுச்சேவைக்கு பொது வாழ்வில் நாட்டமுள்ள தொண்டர்கள் தேவைஎன்று எழுதினார்.

வந்தேமாதரம். அல்லாஹு அக்பர் இரண்டும் இருபுறம் அச்சிடப் பட்டு பாப்பாரப்பட்டி பாரதாமாதா ஆசிரம பிரதிக்ஞைப் பத்திரம் வெளியானது தருமபுரி பாப்பாரப்பட்டி நண்பர்கள் பேருதவி செய்துள்ளனர் என்பது தெரியவருகிறது.

சின்னமுத்து முதலியார், தீர்த்தகிரி முதலியார் ஆகியோரை நல்ல நண்பர்களாகப் பெற்றிருந்த சிவா ஸ்வதந்திரானந்தர் என்ற பெயருடன் காவியுடை உடுத்தி பாரதமாதா கோவில் கட்டத் திட்டமிட்டார்.

புலனழுக்கற்ற அந்தணர்

1). அந்தணர் என்போர் அறவோர்’ இது வள்ளுவர் பிற உயிர்கள் வாழத் தான் முனைந்து பாடுபட்ட அந்தணர் சிவா.

2). நூலாசிரியர் பத்திரிகை ஆசிரியர்.

3). தொழிற்சங்கம் இல்லாமலேயே பாட்டளிகளை ஒன்றாக்கியவர்.

4). பொதுவுடைமைவாதி.

5). தனித் தமிழில் கட்டுரை எழுதுவோருக்கு 5 ரூபாய் பரிசு என்று 1915–லேயே அறிவித்த தனித்தமிழ்ப் பற்றாளர்.

6). ஒன்று எங்கள் ஜாதியே என்று திருமூலர் வழியில் நடந்த சித்தர்.

7) எந்த நேரமும். பாரத விடுதலை. பாரத மாதா வழிபாடு என்று வாழ்ந்த அப்பழுக்கற்ற துறவி

இன்னும் வீரத்துறவி சுப்பிரமணிய சிவா குறித்து எவ்வளவோ எழுதலாம்.

நாட்டு விடுதலைக்குப் பேச்சு எழுத்து, இதழியல், நாடகம், நடிப்பு என்ற பல துறையிலும் தொண்டு செய்த சுப்பிரமணிய சிவம் அடுத்தடுத்த சிறைவாசம், தன் உடல்நலத்தைக் கவனிக்காமல் ஈடுபட்ட விடுதலைப் போராட்டம், வறுமை இவற்றால் நோயுற்றார்.

இவர் காந்தியின் அகிம்சை வழிப் போராட்டத்தை ஆதரிக்க வில்லை தீவிர வாதமே இவரது எண்ணம் இவர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டதனால் இவரை அன்றைய பிரிட்டிஷ் அரசு ரயிலில் பயணம் செய்வதை தடை செய்திருந்தது.

எனவே இவர் மதுரையிலிருந்து தன் உடல் உபாதையையும் பொருட்படுத்தாமல் பாப்பாரப்பட்டிக்கு வந்துவிட வேண்டுமென்று கால்நடையாகவே பயணம் செய்து வந்து சேர்ந்தார் இவருக்கு வயது அதிகம் ஆகவில்லையாயினும், தொல்லை தரும் கொடிய வியாதி. ஆங்கில அரசின் கெடுபிடியினால் கால்நடைப் பயணம் இவற்றல் ஓய்ந்து போனார்.

இவர் யாருக்காகப் போராடினாரோ அந்த மக்களும் சரி, சுதந்தி ரத்துக்காக முன்நின்று போராடிய காங்கிரசும் சரி, இவர் காந்தியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால் இவர் ஒதுக்கப்பட்டார். மனம் உடைந்த சிவா 23–7–1925இல் இவ்வுலக வாழ்க்கையை நீத்து அமரரானார்.

# வேதம் புதுமை செய்

**(01-2-2026) அன்று சிவகாசி அனுப்பங்குளத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராம்ஜி பாலிபேக்ஸ் வளாகத்தில் நடைபெற்ற ஹிந்து ஒற்றுமைத் திருவிழாவில் குருகுலத்தென்றல் ஆசிரியர் டாக்டர்,V.K.S.சிவசக்திபாலன் வழங்கிய தலைமையுரை,**

நமது புராணங்கள் மிகமிகத் தொன்மையானவைகள். இராமாயணக் காலம் சுமார் 17 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறுகின்றார்கள்.

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருப்பது விஞ்ஞான காலம்.

எத்தனையோ ஞானிகளும் முனிவர்களும் தோன்றி இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கும் முற்பட்ட நமது வேதங்களையும் புராணங்களையும் அந்தந்த காலத்திற்கு ஏற்ற வகையில் எடுத்துரைத்து நமது வேதங்களையும் புராணங்களையும் இளமை மாறாமல் பாது காத்தனர்.

இன்று –

எனது பேரன் படிப்பது எனக்குப் புரிவதில்லை. இந்த 50–60 வருடங்களி லேயே way of teaching எவ்வளவோ மாறி விட்டது. அப்படியென்றால் இலட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டவைகளை இன்றைய விஞ்ஞான உலகத்தி ற்கு ஏற்ற வகையில் எடுத்துரைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

கடவுள் யார்?

உலகில் தோன்றிய காலம் தொட்டு இன்று வரை இளமை மாறாமல் இருக்கும் விஷயங்களில் இந்த கேள்வியும் ஒன்றாகும்.

பொதுவாக –

நமது இயல்புகளுக்கு ஏற்ற வகையில் தான் நமது எண்ணங்களும் இருக்கும்.

ஒரு மாடு "கடவுள் யார்?" என்ற கேள்விக்குத் தன்னைப் போலவே இருக்கும் ஒரு மாடு – ஆனால் மிகமிகப் பெரிய மாடு– அதே சமயம் சர்வ வல்லமை பொருந்திய மாடு – தான் கடவுளாய் இருக்க முடியும் என்றே எண்ணிக் கொள்ளும்.

எல்லா உயிரினங்களும் அவர்களைப் போன்று இருப்பவர் – ஆனால் சர்வ வல்லமை பொருந்தியவர் தான் கடவுளாய் இருக்க முடியும் என்றே எண்ணிக் கொள்ளும்.

மனிதனும் அவ்வாறே எண்ணிக் கொள்கின்றான் – கடவுளை மனித உருவத் திலேயே காண்கின்றான். பைபிளில் தேவன் தேவ சாயலை ஒத்த ஆதாமை படைத்தான் என்றே கூறப்பட்டுள்ளது.

ஆனால் –

ஹிந்து மதம் மட்டுமே எல்லா உயிரினங்களின் வடிவங்களிலும் கடவுளைக் காணும் படி நமக்குக் கற்பிக்கின்றது.

"எவனொருவன் எல்லா உயிரினங்களிலும் என்னைக் காண்கின்றானோ

**அவனுக்கு நான் காணாமல் போவதில்லை"** – என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் கூறுகின்றார்.

அதனால் –

ஹிந்துக்கள் மட்டுமே ஏனைய உயிரினங்களின் வடிவங்களிலும் கடவுளை வழிபடுகின்றனர்.

இதை மூட நம்பிக்கை என்று கேலி பேசுபவர்கள் தான் சிந்திக்கும் திறன் அற்றவர்கள் ஆவர்.

எத்தனையோ திரைப்படங்களைப் பார்க்கின்றோம். அதில் பிரம்மா – விஷ்ணு – சிவன் என மும்மூர்த்திகளையும் காண்கின்றோம்.

இதனால் – கடவுளை மனித வடிவில் உள்ள சர்வ வல்லமை பொருந்திய வராகவே நாமும் எண்ணிக் கொள்கின்றோம். அப்படித்தான் நம்மால் நினைக்க முடியும். எனவே அப்படியே நினைத்துக் கொள்ளுங்கள். அதில் தவறேதும் இல்லை.

ஆனால்–

அதே சமயம் நமது ஹிந்து வேதங்கள் நமது தெய்வங்களைப் பற்றிக் கூறுவதை தயவு செய்து நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு நமது சிந்தனைகளை விரிவாக்கிக் கொள்ள வேண்டும். வெறுமனே நமது தெய்வங்களைச் சர்வ வல்லமை பொருந்தியவர்கள் என்பதுடன் நமது சிந்தனை யைச் சுருக்கிக் கொள்ளக் கூடாது.

சாதாரணமாக ஏனைய மதங்கள் எல்லாம் கடவுளை எல்லாம் வல்லவர் – சர்வ சக்திகளும் பொருந்தியவர் என்று மட்டுமே வர்ணிக்கின்றன.

ஆனால் –

ஹிந்து வேதங்கள் மட்டுமே நமது தெய்வங்களின் ஆற்றல்கள் எப்படிபட்ட தாய் இருக்கும் என்று விவரித்துக் கூறுகின்றன.

இது விஞ்ஞான காலம். நமக்கும் பகுத்தறிவு இருக்கின்றது.

எனவே –

நமது வேதங்களில் நமது தெய்வங்களைப் பற்றியும் அவற்றின் ஆற்றல் கள் பற்றியும் நமது வேதங்கள் என்ன சொல்கின்றன என்பதைப் புரிந்து அதன்படி நமது சிந்தனைகளை விரிவாக்கிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாய் –

நமது பிரம்மாவை எடுத்துக் கொள்ளுங்கள்.

அவரை நமது திரைப்படங்களில் பொம்மைத் தலைகளுடன் பார்க்கலாம்.

ஆனால் –

நமது வேதங்கள் பிரம்மாவை நம்மை விட **மூன்று கோடியே பதினோரு லட்சத்து நாலாயிரம் கோடி மடங்கு பெரியவர்** என்று விவரிக்கின்றன.

இது இங்கு எத்தனைப் பேருக்குத் தெரியும்?

ஹிந்து ஒற்றுமை வேண்டி இங்கு கூடியுள்ளீர்கள். ஆனால் ஹிந்து வேதங்கள் என்ன கூறுகின்றன் என்பதே நமக்குத் தெரியாது. எனவே தான் மாற்று மதத்தின் நமது தெய்வங்களைச் சாத்தான் என்று கூறும் போது நமக்குச் சொரனையே வருவதில்லை.

(தொடரும்)

# SRI ARUMUGAM'S




TWO ROSE **Sparklers, Chakkars, Flower Pots, Fancy items, Gift boxes, Color Matches and Roll Caps** TWO ROSE

TRADEMARK ® TWO ROSE REGISTRATION No. 397076

**SRI ARUMUGA BHAVAN**
No.212, Amman Koil Patti Middle Street,
Post Box No. 136, **SIVAKASI - 626 189.**
Website : www.arumugamfireworks.com
E-mail : arumugamfw.svk@gmail.com
Off : 04562-277277, 278277





## SRI ARUMUGAM FIREWORKS (P) LTD., SIVAKASI.



Printed by **SRI GANESH INDUSTRIES,** 2/D-4, Arumugam Road, Sivakasi and Published by **Dr. V.K.S.SIVASAKTHI BALAN,** 65, Kuttiananjan Street, Sivakasi on behalf of **GURUKULAM,** Sakthi Clinic Compound, Murugaiahpuram, Vishwanatham - 626 189. Editor : **Dr. V.K.S.SIVASAKTHI BALAN**

GURUKULA THENDRAL ( Tamil Monthly) REGISTERED
Registered with Registar of Newspaper of India No : 63702/95
Postal Registration No. VGR/061/2024-2026
Posted at Sivakasi East Post Office on 16.06.2026

One Place for All Fashion Needs!!

- Fashion Jewellery
- Cosmetics
- Handbags
- Celebration Items
- Head Accessories
- Gifts

KOSALA

Kosala Trends
... A Trend Setting Centre for Girls and Women
Opp. Sivakasi, Arulmigu Sri Mariamman Kovil Theppam
Follow us on
kosala trends



TOYS
HOUSE



Fun
Unlimited

Coolest Toys
for
Coolest Kids



34, P.K.S.A. Arumuga Nadar Road,
Sivakasi.
Cell: 94431 56277
94431 21277